**தலைப்பு 313 – மத்திய மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

மத்திய மாகாணத்தின் பெருந்தகை மக்களுக்கு சுபீட்சமுடைய வாழ்க்கையை பெற்றுக்கொடுக்கும் இலக்கை கொண்ட இலங்கையின் மிகச் சிறந்த மாகாண சபையாக மத்திய மாகாண சபையை பரிணமிக்க செய்தல்.

### 1.2 பணிக்கூற்று

மத்திய மாகாணத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் உரிய கலாச்சார, சமூக, பொருளாதார நிலைகள் மற்றும் சுற்றாடல் ஆகியன காக்கப்படும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மனித, பௌதீக வளங்களை செயற்திறனுடனும், பயனுறுதியுடனும் ஈடுபடுத்துவதுடன் மத்திய மாகாண மக்களுக்கு நிரந்தரமான கௌரவமான உயரிய வாழ்க்கை நிலையை உருவாக்கல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மத்திய மாகாண சபைக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 28,477.25 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 26,014.55 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 2,462.70 மில்லியன் தொகை அதாவது 8.65 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 23,319.63 | 23,319.63 | - | - |
| மூலதனம் | 5,157.62 | 2,694.92 | 2,462.70 | 47.75 |
| **மொத்தம்** | **28,477.25** | **26,014.55** | **2,462.70** | **8.65** |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.